பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 06 திங்கட்கிழமை 21.12.2020 கதிர் 46

இது ரகசியம் அல்ல!

மாகாண சபைத் தேர்தல் நடத்துவது என்ற ஆளும் தரப்பின் அறிவிப்பு இந்தியாவின் காதிலும், இலங்கை மக்களின் காதிலும் பூச் சுற்றும் வேலை என சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். இந்தியத்

பக்கம் 02

## பலாலி விமான நிலையம் இப்போது திறக்கப்படாது!

ராஜபக்ஷ அரசு அறிவிப்பு




இம்மாதம் 26ஆம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்

பக்கம் 02

## ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கவேகூடாது!

விக்கி தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நேற்று ஒன்றுகூடி முடிவெடுத்தது என்கிறார் சிவாஜிலிங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

நேரடியாகவோ மறைமுகமாகவோ ஜெனிவாவில் இலங்கை அரசுக்குக் கால நீடிப்பு வழங்கப்படக் கூடாது என்று சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்

பக்கம் 02



# நீதி கிடைக்கும் வரைக்கும் தமிழர் பிரச்சினை சர்வதேச அரங்கில் ஓங்கி ஒலிக்க வேண்டும்!

## ஜெனிவா விவகாரத்தை தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் நேரில் பேசிக் கையாளுவோம் என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, டிசெம்பர் 21

இலங்கை அரசாலும் அதன் படைகளாலும் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் தமிழர் பிரச்சினைகள் சர்வதேச அரங்கில் தொடர்ந்து ஒலிக்க வேண்டும். எனவே, இலங்கையில் தற்போது ஆட்சி மாற்றம் இடம்பெற்றுள்ளமையால் இம்முறை ஜெனிவா விவகாரத்தை நாம் தக்க முறையில் கையாள வேண்டும். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் நேரில் பேசி இறுதி முடிவை எடுப்போம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

பக்கம் 02



## பல்கலை மாணவனுக்கு வவுனியாவில் தொற்று!

வவுனியா குருமன்காட்டில் 22 வயதுடைய பல்கலைக்கழக மாணவனுக்கு நேற்று இரவு கொவிட் -19 தொற்று உறுதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தைச்

பக்கம் 02

## சுகிர்தனின் வாகனம் மீது தாக்குதல்!



வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தனின் வாகனம் நேற்று மாலை 05.55 மணியளவில்

பக்கம் 02

## ராஜபக்ஷ அரசின் அழிவின் ஆரம்பமே 2021ஆம் ஆண்டு


அடித்துக் கூறுகின்றார் மனோ

2021ஆம் ஆண்டு என்பது ராஜபக்ஷ அரசின் அழிவின் ஆரம்பம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பக்கம் 02



## ஜனாஸா எரிப்புக்கு எதிராக சந்திரிகாவும் போர்க்கொடி!



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதில்லை என்ற முடிவை அரசு உடனடியாக மாற்ற வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க

பக்கம் 02

## மேலும் 594 பேருக்கு கொரோனா தொற்று

37 ஆயிரத்தைத் தாண்டியது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் நேற்றும் 594 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

02

## இலங்கையில் 176 பேரை பலியெடுத்த கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

நான்கு ஆண்களும், பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பக்கம் 02

## கொரோனாத் தொற்று ஆபத்தால் திருமலை பாடசாலைகளும் பூட்டு!

திருகோணமலை கல்வி வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் மறு அறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இன்று முதல் மறு

பக்கம் 02

யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை;

## ஆட்சியமைப்பது தொடர்பில் ஈ.பி.டி.பியுடனும் முன்னணியுடனும் நேரில் பேச்சு நடத்துவோம்

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை அறிவிப்பு

யாழ். மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடனும் (ஈ.பி.டி.பி.) நாம் நேரில் பேச்சு நடத்துவோம். அத்துடன் எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறும் கலந்துரையாடல்களின் பின்னரே யாழ். மாநகர சபையில் மேயருக்கு யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பில் தீர்மானிப்போம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்

பக்கம் 02





## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரப்பின் வற்புறுத்தலுக்கு இணங்க இந்தத் தேர்தலை நடத்தப் போவதாகவும் அதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன எனவும் அறிவித்தல் விடுத்த ஆளும் தரப்பு, அதேசமயம் அத்தேர்தல்களை நடத்தக் கூடாது, அந்த மாகாணசபை முறைமையையே ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற கருத்தை பௌத்த, சிங்கள தீவிரப் போக்கு பேரினவாதிகளைக் கொண்டு முழங்கவும் வைக்கின்றது.

இதையே இலங்கை அரசின் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேலை' – என்று விமர்சித்திருந்தேன்.

இலங்கை அரசின் இந்த இரட்டை வேடத்தை – குத்துக்கரணத்தை – பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

*"மாகாணசபைத் தேர்தல்கள் மார்ச் மாதத்துக்கு முன்னர் நடைபெறும். அதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்."* – என்றெல்லாம் பிரதமர் மறித்த ராஜபக்ஷவின் அரசும் பிரதமரின் பிரதிநிதிகளும் கூறியே வந்தனர்.

மாகாணசபைத் தேர்தல்களை மேலும் காலத்தை இழுத்தடிக்காமல் நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் பிரதமர் உறுதியாக இருக்கின்றார் என்ற மாதிரியான சமிக்ஞையே பிரதமர் பக்கத்தில் இருந்து இது வரை வந்தது.

ஆனால் திடீர் குத்துக்கரணமாகப் புதுத் தகவல்கள் பிரதமர் பக்கத்தில் இருந்து இப்போது வெளியாகியுள்ளது.

*"நாட்டின் கள நிலைமை தேர்தல் நடத்தக் கூடியதாக இருக்கும் போதுதான் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும்"* – என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இப்போது அறிவித்திருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

*"நாங்கள் எதிர்பார்ப்புக்களை எல்லாம் கூறமுடியாது. ஆனால் நிலைமை சீரடைந்த பின்னர்தான் தேர்தல்"* – என்கிறார் இப்போது அவர்.

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதில் அரசுக்கு ஆர்வம் இல்லை என்பதையே அவரது தற்போதைய கருத்துக்கள் துலாம்பரப்படுத்தப்படுகின்றன.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் அரசுக்கு உண்மையான கரிசனை இருக்குமானால் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டமூலத்தை அரசு நடாளுமன்றத்துக்குக் கொண்டு வரவேண்டும். அப்படி வராதவரை அந்தத் தேர்தலை நடத்துவது என்ற பேச்சு மக்களின் காதில் பூச்சுற்றும் வேலைதான்.

அதைத்தான் அரசு செய்து கொண்டிருக்கின்றது.

★ ★ ★

யாழ் மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை போன்றவற்றில் வரவு – செலவுத் திட்டங்கள் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து புதிய மேயர் மற்றும் தவிசாளர் தெரிவுகள் இடம்பெறவிருக்கின்றன அல்லவா?

இப்படிச் சிக்கல் வடக்கில் மட்டுமல்லாமல் தெற்கிலும் பல உள்ளூராட்சி சபைகளில் உள்ளதாம்.

அங்கு பல இடங்களிலும் ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவே (மொட்டுக் கட்சியே) நெருக்கடியை எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

அக்கட்சியின் கீழ் மட்டம் பெரும் நெருக்கடியில் – அரசியல் குழப்பத்தில் – இருப்பதையே இது காட்டுகின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தச் சிக்கலைத் தீர்த்து, கீழ்மட்ட முரண்பாடுகளைக் களைந்து, ஓர் இணக்க நிலையை ஏற்படுத்தாமல் மாகாணசபைத் தேர்தல்களுக்கு ஆளும்கட்சி செல்லுமானால், தென்னிலங்கையில் கூட அது அடி வாங்கிப் படுப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும் என ஆளும் தரப்பு உயர் பீடங்களுக்குப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளனவாம்.

இதனால், மாகாணசபைத் தேர்தல்களை அறிவிப்பது குறித்து கொழும்புத் தலைமை ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிப்பதாகவும் தகவல்.

ஆக, மாகாணசபைத் தேர்தல்கள் பிள்ளையார் கலியாணம் போல நாளை, நாளை என்று தள்ளிப் போவது தவிர்க்க முடியாதது போலதான் தோற்றுகின்றது.

– மின்னல் –

## பலாலி விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படுகின்றது. பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட ஏனைய விமான நிலையங்கள் திறப்பு தொடர்பில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஆராயப்படும்.

– இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த கட்டுநாயக்க சர்வதேச விமானம் எதிர்வரும் 26ஆம் திகதி சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படவுள்ளது. ஏனைய விமான நிலையங்கள் இப்போது திறக்கப்படாது. அவை திறக்கப்படுவது தொடர்பில் அடுத்த மாத நடுப்பகுதியில்தான் ஆராயப்படும் – என்றார்.

## மேலும் 594...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 261 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 33 ஆயிரத்த 590 பேருக்கு கொரோனாவின் மூன்றாவது அலையின்போது வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, மொத்தத் தொற்றாளர்களில் 28 ஆயிரத்து 267 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்றும், 8 ஆயிரத்து 823 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## கொரோனா தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்தல் வரை குறித்த கல்வி வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அறிவித்துள்ளார்.

திருகோணமலை நகர் எல்லைக்குள் 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## பல்கலை மாணவனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இன்று திங்கட்கிழமை வெளிநாடு செல்லும் நோக்கில் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு வருகை தந்து குருமன்காட்டிலிலுள்ள அவரது நண்பர்களுடன் தங்கியிருந்துள்ளார். அதன் பின்னர் சனிக்கிழமை மாலை வெளிநாடு செல்வதற்காக கொழும்பிற்கு சென்றுள்ளார்.

வெளிநாடு செல்வதற்காக அந்த மாணவனுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட சமயத்தில் அதன் முடிவுகள் நேற்றுஇரவு 8.20 மணியளவில் வெளியானது. அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து அவர் வவுனியாவில் தங்கியிருந்த அவரின் நண்பர்களின் வீடு சுகாதார பிரிவினரினால் நேற்று இரவு முடக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பல்லைக்கழக மாணவன் வவுனியாவில் நடமாடிய இடங்கள் தொடர்பிலான விசாரணைகளையும் சுகாதார பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## ராஜபக்ஷ அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷ அரசு இன்று தோல்வியடைந்த அரசாக மாறிவிட்டது. இந்த அரசை சிங்கள மக்களும் பௌத்த தேரர்களும் விமர்சிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

நாட்டுக்குப் பொருத்தமற்ற – நாட்டு மக்கள் விரும்பாத – தலைகீழான நடவடிக்கைகளையே இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது.

நல்லாட்சியில் நாம் முன்னெடுத்த உருப்படியான எந்த வேலைத்திட்டங்களையும் இந்த அரசு இதுவரை ஆரம்பிக்கவில்லை. ஒரு பக்கம் சிறைக் கொலைகள் – மறுபக்கம் ஊழல், மோசடிகள்தான் இந்த ஆட்சியில் தலைவிரித்தாடுகின்றன.

நாங்கள் அரசை எதிர்ப்பது ஒருபுறமிருக்க இந்த அரசை உருவாக்கியவர்களே அரசு அழிய வேண்டும் எனக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டார்கள்.

ஆகவே, 2021ஆம் ஆண்டு என்பது இந்த அரசின் அழிவின் ஆரம்பம் என நினைக்கின்றேன் – என்றார்.

## சுகிர்தனின் வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கீரிமலை – மாவிட்டபுரம் வீதியில் வைத்து தாக்கப்பட்டது. வாகனம் வழி மறிக்கப்பட்டு ஹெல்மட்டினால் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதனால் வாகனத்தின் கண்ணாடிகள் சேதமடைந்தன. அச்சமயம் வாகனத்துக்குள் அமர்ந்திருந்த பிரதேச சபைத் தலைவர் சோ. சுகிர்தன் தலை குனிந்து தப்பிக் கொண்டார்.

தாக்குதல் நடத்தியவரை கைது செய்வதற்கான முயற்சியில் இளவாலை பொலிஸார் ஈடுபட்டிருக்கின்றனர்.

## ஜெனிவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நான்கு கட்சிகள் அடங்கிய குழுவின் ஆலோசனைக் கூட்டம் நேற்று கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சிவாஜிலிங்கம் –

இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பது தொடர்பாகவும் மற்றும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது ஜெனிவா விடயம் தொடர்பாகவே முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக ஜெனிவாக் கூட்டத் தொடர் தொடர்பில் மூன்று பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு யோசனையை முன்வைத்தால் அதே யோசனையை ஏனைய சிவில் அமைப்புக்கள், மதப் பெரியார்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளும் ஏற்றுக்கொண்டால் அது ஒரு சிறந்த நிலைப்பாடாக இருக்கும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளோம்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்குத் தெரியப்படுத்தவுள்ளோம். அவர்களும் இணைந்து ஒரு முடிவு எடுக்கக்கூடிய வகையிலேயே இந்த யோசனைத் திட்டம் அமைந்துள்ளது.

அந்தவகையில், குறித்த கட்சிகளினால் மாற்று யோசனைகள் முன்வைக்கப்படுமாயின் அதற்கு ஏற்றவாறு முடிவுகள் மாற்றப்படும். குறிப்பாக இலங்கை அரசுக்குக் கால நீடிப்பு வழங்கப்பட கூடாது என்ற அடிப்படையில் குறித்த யோசனைத் திட்டம் அமைய வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருக்கின்றது – என்றார்.

## ஜனாஸா எரிப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குமாரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்திரிகா தனது உத்தியோகபூர்வ முகநூலில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பான விடயம் தொடர்பில் அனைத்து விவரங்களும் கிடைக்கும்வரை நான் அறிக்கை எதனையும் விடப்போவதில்லை. இதேவேளை, உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களைத் தகனம் செய்யத் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் ஆதாரமற்றவை என நான் கருதுகின்றேன்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள ஆராய்ச்சியாளர்களுடனும், விஞ்ஞானிகளுடனும் ஆராய்ந்த பின்னர் உடல்களைத் தகனம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் வழக்கத்தை முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக பின்பற்றுகின்றனர். முஸ்லிம் சமூகத்தினர் தங்கள் மத நம்பிக்கையைப் பின்பற்றி ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு நியாயபூர்வமான உரிமையுள்ளது. இது எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாதது – என்று குறிப்பிட்டுள்ளார்.

# மருதனார்மடம் கொத்தணி 90

### நேற்று இருவருக்குத் தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மருதனார்மடம் கொத்தணியில் நேற்று இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 120 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மருதனார்மடம் கொத்தணியில் மொத்தமாகத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

## இலங்கையில் 176...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பலியானவர்களின் எண்ணிக்கை 176 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 163 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதி கிடைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜெனிவா விவகாரத்தைக் கையாளப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் தயாரிக்கப்பட்ட ஒரு நகல் வடிவம் வரைவுத் திட்டமாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனால் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி. மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. ஆகியோரிடம் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் அந்த நகல் வரைவை நிராகரித்துள்ள நிலையில் ஜெனிவா விவகாரத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு அணுகும் வகையில் அந்தக் கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என்று கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தீர்வு காண்பதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளது. இதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும். நாங்கள் முரண்பட்டு நின்றால் அது தெற்கு அரசியல்வாதிகளுக்குச் சாதகமாகப் போய்விடும். எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத்திலும் சர்வதேச ரீதியிலும் ஓரணியில் நின்று தமிழர்களின் உரிமைக்காக – நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டும் – என்றார்.

## ஆட்சியமைப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் எமக்குச் சில சபைகளின் வரவு – செலவுத்திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஆதரவு வழங்கின. அந்த அடிப்படையில் யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றிலும் அந்தக் கட்சியினரின் ஆதரவைக் கோரி இருந்தோம். ஆனால், அவர்கள் அந்தச் சபைகளில் எங்களைத் தோற்கடித்தனர்.

எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் குறித்த சபைகளின் உறுப்பினர்கள், எமது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் முக்கிய கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது இரண்டு சபைகளிலும் மேயர் மற்றும் தவிசாளர் பதவிக்கு யாரைப் பிரேரிப்பது என்பது தொடர்பில் ஆராயப்படும்.

அத்துடன் இரண்டு சபைகளிலும் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் ஈ.பி.டி.பியுடனும் மீண்டும் பேச்சு நடத்துவோம். அந்தப் பேச்சு நேரில் நடைபெறும் – என்றார்.

# இணைய வகுப்புக்களில் சிறிய கைபேசி பாவிக்கின்றமை கண் பாதிக்கப்படலாம்!

## எச்சரிக்கிறார் வைத்தியர் யமுனானந்தா

இணைய வழி வகுப்புகளில் சிறிய கைபேசிகளை பாவிப்பதன் மூலம் கண் பாதிக்கப்படலாம் என யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

தற்பொழுது கொரோனா அச்ச நிலைமை காரணமாக தனியார் கல்வி நிலையங்கள் செயற்படாத நிலையில் இணையவழி மூலம் அதிகளவிலான கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

கொரோனா காலத்துக்குப் பின்னர் இளம் பிள்ளைகளின் கல்வியில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலை கல்வியானது இடையிட்டு நடைபெறுவதும் பாடசாலை கல்வி செயற்பாட்டுக்கு தொடர்ச்சியாக செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இது குழந்தைகளின் கல்வியில் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

ஆனால் கல்வி நடவடிக்கைகளை ஊட்டுவதற்காக ஆசிரிய சமூகமும் கல்விச் சமூகமும் தற்போது இணையவழி மூலம் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். இது ஓரளவுக்கு ஆரோக்கியமானது என்றாலும் நேரடியாகக் கல்வி கற்பித்தலுக்கும் இணைய வழி மூலம் கல்வி கற்பிப்பதற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன.

அதாவது ஓர் ஆசிரியர் நேரடியாக கல்வி கற்பிப்பதிலும் கணினி மூலம் கல்வி கற்பிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. குறிப்பாக மாணவர்களை அருகில் வைத்து கற்பிக்கும்போது உடல்மொழி மூலமும் சில கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது இணையவழி மூலம் ஏற்படுகிற போது அது இடம்பெறாது.



மேலும் கணணி திரைகளின் மூலம் கற்பிக்கப்படுகிற போது ஒரு குறிப்பிட்ட பகுதியை மாத்திரமே மாணவர்கள் பார்த்துக்கொள்வார்கள். தொடர்ச்சியாக கணனித் திரையை பார்க்கும் போது மூளைச் சோர்வு நிலை ஏற்படுகின்றது. இதனால் அவர்களது கிரகிக்கின்ற தன்மை குறையலாம்.

இதனால் இணைய வழி வகுப்புகளைநேரடி கல்வியுடன் ஒப்பிடும் போது தரம் குறைந்ததாகவே காணப்படுகின்றது.

அடுத்ததாக தொடர்ச்சியாக இணைய வழிக்கல்வியில் ஈடுபடும் போது அவர்களுடைய கண்பார்வையில் பாதிப்பு ஏற்படலாம். குறித்த ஒரு பகுதியை மாத்திரம் தொடர்ச்சியாக நோக்கும்போது கட்புலன் பாதிப்பு ஏற்படும் தலையிடி, கண்நோ ஏற்படும்.

இதனால் மாணவர்கள் சிரத்தையுடன் கல்வியை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படும் நீண்ட நாள்களுக்கு பிறகு கண் பார்வைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

குறிப்பாக ஒவ்வொருவருடைய பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப இணையவழி வகுப்புக்கு தொலைபேசிகளை பாவிப்பார்கள். அதிகளவிலான இணைய வழி வகுப்புகளில் கலந்து கொள்வோர் சிறிய தொலைபேசிகளை பாவிப்பதன் மூலம் அவர்களுடைய கண் பாதிக்கக் கூடிய நிலை காணப்படுகிறது. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

அத்தோடு இணைய வகுப்புகளின் போது கட்டாயமாக அடிக்கடி இடைவெளி விட்டு கண்களுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும். தொடர்ச்சியாக சில இணைய வழி வகுப்புகள் நடைபெறுகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனினும் இணையவழி வகுப்புகளின் போது இடைவெளி விட்டு கண்களுக்கு ஓய்வு கொடுத்து வகுப்புகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமான விடயமாகும்.

இணைய வழி மூல தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் மனிதனுடன் மனிதன் தொடர்பு கொள்வதற்கான சந்தர்ப்பம் குறைகின்றது. இது ஒருவித உளதாக்கத்தை ஏற்படுத்தலாம். குறிப்பாக மனச்சோர்வு நிலை ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன இதற்கு நாங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

முகக் கவசம் போடுவது போல் கொரோனாவிற்காக மக்கள் மன கவசத்தையும் மக்கள் கையில் பற்ற வேண்டிய காலமிது.– எனத் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் அடை மழை தாழ்நிலங்கள் மூழ்கியுள்ளன!





திருகோணமலை, தம்பலகமம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடந்த சனிக்கிழமை பெய்த அடை மழை காரணமாக வெள்ள நீர் உட்புகுந்துள்ளதுடன் வீடுகள், வயல் நிலங்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் முள்ளிப் பொத்தானை நான்காம் வாய்க்கால் உட்பட பல தாழ் நிலப் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன எனவும் இதனால் வீடுகள் குடியிருப்பு பகுதிகள் என்பன மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்துக்கு தம்பலகமம் பிரதேச சபையின் தவிசாளர் எச்.தாலிப் அலி வெள்ள பிரதேசத்துக்கு சென்று அங்கிருக்கும் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் நீர் வடிந்தோடக்கூடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தார்.

இதில் பிரதேச சபை உறுப்பினர்களான ஆர்.றஜீன், தன்சூர் அலி ஆகியோரும் களத்தில் நின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மஹர சிறைச்சாலை அதிகாரிகள் பயன்படுத்திய 53 துப்பாக்கிகள் சி.ஐ.டியால் கைப்பற்றப்பட்டன

மஹர சிறைச்சாலை அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்ட 53 துப்பாக்கிகள் சி.ஐ.டியால் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

விசேட நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வாறு துப்பாக்கிகள் சி.ஐ.டியினரால் கைப்பற்றப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மஹர சிறைக் கலவரம் தொடர்பில் இதுவரையில் 500 இற்கு மேற்பட்டோரிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லங்கா பிரிமியர் லீக் போட்டிகள்: வடமாகாண வீரர்கள் கௌரவிப்பு!

லங்கா பிரிமியர் லீக் போட்டிகளில் வடமாகாணம் சார்பில் யப்னா ஸ்ரலியன்ஸ் அணிக்காக பங்கு கொண்ட வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த (சனிக்கிழமை) இடம்பெற்றது.

தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் யாழ்.துடுப்பாட்ட சங்க ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி அரியாலையிலுள்ள தனியார் விடுதியில் இடம் பெற்றது.

கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

வாகனத் தொடரணி மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்ட வீரர்கள் மேள வாத்தியம் முழங்க நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் போது வியாஸ்காந்த், கபில்ராஜ், டினோசன், விஜேயராஜ் ஆகிய வீரர்களும் இவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட ரதீபனும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.








## திடீரென மயங்கி விழுந்த பொலிஸ் பரிசோதகர் சாவு!

திருமலை நாச்சிக்குடாவைச் சேர்ந்த 54 வயதுடைய சுமண பண்டார ஞாயிறு அதிகாலை 2.45 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது நெஞ்சு வலி காரணமாக மயங்கி வீழ்ந்த அவரை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது வழியில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வதேச ஆதரவைத் திரட்டுவோம்!

ஜெனிவாவில் வரும் பெப்ரவரி – மார்ச் மாதங்களில் நடைபெறப் போகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இடையே எதிரும் புதிருமான கருத்துக்கள் – பெரும்பாலும் அரசியல் அதிர் வேட்டுகள் போல – முழங்கப்படுகின்றன.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி கள யதார்த்தங்களை – சர்வதேச நடவடிக்கை முறைமைகளை – புரியாமல் பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விடயத்தில் ஆற்ற வேண்டிய கருமங்களை ஆற்றுவதை விடுத்து, தேவையற்ற புலம்பல்களை தமிழர் தரப்பு அரற்றிக் கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

கால அவகாசம் கொடுப்பதா, கொடுப்பதில்லையா என்ற சர்ச்சையைக் கேட்டு தமிழர்களின் காதுகள் புளித்துப் போய்விட்டன.

சில யதார்த்தங்களை – நடக்கக் கூடியவற்றை – நாம் கருத்தில் எடுப்பதுதான் பொருத்தமானது. அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் செயன்முறைப் போக்கை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் – கடந்த ஐந்து வருடங்களில் நிகழ்ந்தமை போல – இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் வரக் கூடிய எந்தப் பிரேரணைக்கும் இலங்கை அனுசரணைப் பணி வகிக்காது. மாறாக, வெளிப்படையாக எதிர்த்து நிற்கும். அதுவும் தனித்து எதிர்க்காது. சீனா மற்றும் ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற வலுவான நட்பு சக்திகளின் ஆதரவுடன் அந்த எதிர்ப்பை இலங்கை வெளிப்படுத்தும். வழமைக்கு மாறாக, ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48 அங்கத்துவ நாடுகளில் தனக்கு ஆதரவான தரப்புகளை எல்லாம் இலங்கை ஒன்றாகத் திரட்டி தன் எதிர்ப்பைக் காட்டும்.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்த அவலங்கள் தொடர்பில் நீதி விசாரணைகளை நியாயமாக நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநிறுத்தி, மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காக அத்தகைய விசாரணைகளை வலியுறுத்தும் பிரேரணைகளைக் கொண்டு வர முயலும் நாடுகள் எல்லாம் அந்த விவகாரத்தில் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கின்றன.

இலங்கைக்கு எதிரான ஒரு பிரேரணையை தாங்கள் வெளிப்படையாக முன்னின்று கொண்டு வந்து, அது தோற்கடிக்கப்படுமானால் – அல்லது கவுன்ஸிலில் நிறைவேற்ற முடியாமல் போகுமானால் – அது தங்களின் சர்வதேச இராஜதந்திரத்துக்கு நேர்ந்த பெரும் தோல்வி – பின்னடைவு – என்றாகி விடும் என அவை கருதுகின்றன. அத்தகைய அபவாதம் தமக்கு நேர்ந்து விடாமல்தான் இது விடயத்தில் அவை காய் நகர்த்தும்.

மாறாக, இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக, நீதியுடன் குரல் எழுப்புகின்றோம், வருவது வரட்டும், அது பற்றி எமக்குக் கவலையில்லை என்ற பாணியில் அவை செயற்படமாட்டா; செயற்படப் போவதில்லை.

ஆக, இலங்கை தொடர்பாக புதிய பிரேரணை எதுவும், அதற்குக் கிட்டக் கூடிய சர்வதேச ஆதரவின் அளவின் அடிப்படையில்தான் வீரியம் கொண்டிருக்கும்.

கவுன்ஸிலின் 48 உறுப்பு நாடுகளில் 24 நாடுகளினது ஆதரவையாவது பெறும் வகையில் பிரேரணையின் வடிவங்கள், வாசங்கள், கருத்து நிலைப்பாடுகள் மாறிக் கொண்டேயிருக்கும்.

இன்றைய நிலையில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலை எவ்வாறு கையாள்வது என்ற விடயத்தில் கொழும்பு பெரும் குழப்ப நிலையில் – ஒழுங்குபடுத்தப்படாத சிக்கலில் – இருப்பதாகக் கூறப்படுகின்றது.

போதாக்குறைக்கு, ஜெனிவா அமர்வில் வழக்கமாக இலங்கைக்கு முதுகு கொடுக்கும் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகள் கூட, இப்போது இலங்கையில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி நிலைமை காரணமாக வரும் மார்ச் அமர்வில் கொழும்பு தொடர்பான தங்களின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யும் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சமயத்தில் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுடன் கைகோர்த்துக் கொண்டு ஜெனிவாவை தமிழர்கள் அணுகுவது அங்கு இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு மேலும் வலுச்சேர்க்கும். அந்த வலிமை இலங்கை தொடர்பில் காட்டமான ஒரு பிரேரணை வரைவை கவுன்ஸிலுக்குச் சமர்ப்பிக்கச் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும்.

இலங்கை விவகாரத்தை ஐ.நா.பொதுச்சபைக்கோ அல்லது பாதுகாப்புச் சபைக்கோ சமர்ப்பிப்பதற்குப் பரிந்துரைக்கும் பிரேரணையில் இருந்து வேறு நீதிப் பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தும் பிரேரணை வரைக்கும் எதற்கும் கால அவகாசம் குறிப்பிடுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

ஆகவே கால அவகாசம், காலக்கெடு என்று அவமே பேசிக் கொண்டிராது, இலங்கைக்கு எதிரான சர்வதேச ஆதரவைத் திரட்டத்தக்க வகையில் புத்திசாதுரியமாக நாம் செயற்பட வேண்டும்.

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்.மாவட்டத்தில் உதவித் திட்டங்கள்!

## வழங்கப்பட்டன என்கிறார் அரச அதிபர்

யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 2 ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு நிவாரண உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு அரசால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே யாழ். மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு அரசால் வழங்கப்படும் கொரோனா இடர் நிவாரண உதவியின் கீழ் 2 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் 2 ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு இன்று வரை வழங்கி வைக்கப்பட்டுள்ளன எனவும் –

இந்த நிவாரண பணிகள் இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் எனவும், ஒரு குடும்பத்துக்கு 10 ஆயிரம் ரூபா உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலாளரால் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டு மாவட்ட செயலகத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் நிதி மூலம் பெறப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு குறித்த நிவாரண உதவிகள் கட்டங்கட்டமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

மேலும் 1, 670 குடும்பங்கள் யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்படுத்தலில் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

# கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டால் நாடு அழிவை நோக்கிச் செல்லும்

## ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வுகூறல்

ஜனநாயக நாட்டில் மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமை மீறப்பட்டால் அது நாட்டின் அழிவுக்கு வழிவகுக்கும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர், பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் தெளிவில்லாமல் இருப்பதாகக் குற்றம்சாட்டினார்.

ஆட்சியாளர்களிடமும் குறைபாடுகள் இருக்கலாம் எனக் குறிப்பிட்ட அவர் தவறான முடிவுகளை விமர்சிக்கும் மக்களின் உரிமையும் இதன்போது மதிக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் தனிமைப்படுத்தல் பகுதிகளில் வசிப்பவர்களின் கவலைகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறிவிட்டது என்றும் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் தெரிவித்தார்.

இந்த பகுதிகளில் வசிப்பவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துவிட்டனர் எனவும், அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார் .

# வலி.வடக்கு பிரதேசசபை செயற்பாடுகள் வழமைபோல் நடைபெறும் – தவிசாளர்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெறும் என வலிவடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகு உட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர் ஒருவருக்கு கடந்த சனிக்கிழமை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்த ஊழியர் மின்மோட்டார் இயக்கும் கடமையைப் புரிபவரே தவிர பிரதேச சபை ஊழியர்களோடு நேரடித் தொடர்பு கொண்டவர் அல்லர்.

மேற்படி ஊழியர் வலி.வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பழை உப அலுவலகத்தில் கடமை புரிகின்றார். அந்த ஊழியருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக வலி.வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகளில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

மேற்படி நபருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டவர்களை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தனிமைப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

வுலி.வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. வழமைபோல் சேவைகள் இடம்பெறும். –எனத் தெரிவித்துள்ளார்.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு







மன்னார், நவ.21

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ‘மண் வாசனை’ அமைப்பின் ஊடாக, உலர் உணவு பொதிகள் நேற்றுக் காலை, வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சகல விதமான பாதிப்புகளுக்கும் உள்ளான 71 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில், முதல் கட்டமாக 30 குடும்பங்களுக்கு 1,974 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

மண் வாசனை அமைப்பின் ஊடாக தாய் நிலம் அறக்கட்டளை காரியாலயத்தில் வைத்து, தாய் நிலம் அறக்கட்டளையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அந்தோனி சகாயத்தால் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய அதிவேக வீதியின் திருத்த பணிகள் ஆரம்பம்



கொழும்பு, நவ.21

மத்திய அதிவேக வீதியின் மூன்றாம் கட்ட திருத்த பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையான பகுதியை இணைக்கும் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தமையைத் தொடர்ந்து நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பல கட்டங்களின் கட்டுமானப் பணிகள் முன்னதாகவே தொடங்கப்பட்டிருந்தாலும் பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையான பகுதியின் கட்டுமானம் பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட வேண்டியிருந்தது.

தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து, அதற்கான கட்டுமானங்களை விரைவாகத் தொடங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் கட்டுமான பணிகள் அடுத்த 48 மாதங்களுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொத்துஹெர, பொல்கஹவெல, ரம்புக்கனை மற்றும் கலகெதர ஆகிய பகுதிகளில் 4 வீதி இடைமாறல்களூடாக மத்திய அதிவேக வீதி அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடிய கோப் குழு, மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானத்தில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள் ளமையை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமான நிலையங்களை மீளத் திறக்க ஒத்திகை

கொழும்பு, நவ.21

விமான நிலையங்களை மீளத் திறப்பது தொடர்பான ஒத்திகை எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி மீண்டும் திறப்பது தொடர்பில் திட்டவட்டமான முடிவு எட்டப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் இது தொடர்பில் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் ,2020 செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் 2020 டிசெம்பர் 16 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை நிறைவு செய்த பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீர்வை வரியற்ற வர்த்தக நிலைய தொகுதிகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுமக்களின் பங்களிப்பில்தான் கொவிட் – 19 ஒழிப்பு தங்கியுள்ளது

## வைத்தியர் சுகுணன் தெரிவிப்பு




பொதுமக்களின் பங்களிப்பில்தான் கொவிட் – 19 ஒழிப்பு தங்கியுள்ளது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தலைமையில் நடைபெற்ற விசேட உயர்மட்ட கூட்டத்தின் பின்னரான ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற கொவிட் தொற்றாளர்களான 81 வீதமானவர்களை கல்முனை பிராந்தியம் கொண்டுள்ளது.

இதனால் எமது நடவடிக்கைகளை மேம்படுத்தும் நிலையில் நாம் இருக்கின்றோம். அக்கரைப்பற்று உப கொத்தணியைத் தொடர்ந்து பல பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் 12 கிராம சேவை பிரிவுகள் தனிமைப்படுத்தல் இடங்களாக உள்ளன. முகநூலில் போலியான தகவல்களை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

மக்களின் பாதுகாப்பு சுகாதார தரப்பினரின் பாதுகாப்பு தொடர்பில் இராணுவத்தின் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கப்பெறவுள்ளது. பொலிஸாரும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எமக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

கிராம மட்ட குழுக்களை அமைத்து இந்த விடயம் தொடர்பில் ஆராய்தலும் முக்கிய விடயமாக அமைகின்றது. இதில் மதத்தலைவர்கள், கிராமத் தலைவர்களை இணைத்து எவ்வாறு செயற்படுவது என்ற விடயத்தை ஆராய்ந்தோம். இதற்கு நாம் ஆலோசனைகளை வழங்கவுள்ளோம்.

சாய்ந்தமருது – மருதமுனையில் இவ்வாறான குழுக்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இதனால் சுகாதார துறையாகிய நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவேதான், பொதுமக்களின் பங்களிப்பில் தான் கொவிட் 19 ஒழிப்பு தங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் அதிகளவான மழை வீழ்ச்சி வளி மண்டலவியல் திணைக்களம்

யாழ்.மாவட்டத்தில் 66.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது எனத் திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சி திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.பிரதீபன் தெரிவித்தார்

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நாடு பூராகவும் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை 66.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நாட்டின் பலபாகங்களில் ஞாயிற்றுக்கிழமை 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு, கிழக்கு வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தறை மற்றும் அஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிழக்கு மாகாணம் உட்பட மாத்தளை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழதை 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், சப்ரகமுவ மாகாணம் உட்பட களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பிற்பகல் வேளையில் மழைபெய்யக்கூடும் எனவும் வளிமண்டளவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு, வட மத்திய, வட மேல் மாகாணங்களிலும் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் காற்றின் வேகமானது மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காணப்படும். எனவே, இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் யாழ்.மாவட்ட மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் சீரற்ற காலநிலை 58 குடும்பங்களில் 198 பேர் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் நீடிக்கும் சீரற்ற காலநிலையின் காரணமாக 58 குடும்பங்களைச் சேர்ந்த 198 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் வீசிய காற்று மற்றும் மழை காரணமாக ஒன்பது வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் சேகரிக்கப்பட்டு உரிய திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.




# முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்வதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கின்றது

கொழும்பு, நவ.21

கொரோனாவால் உயிரிழக்கின்ற முஸ்லிம்களின் சடலங்களை அவர்களது கலாசாரத்தை மீறி தகனம் செய்வதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூட்டம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, கூட்டமைப்பால் கண்டன அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனாவால் இறக்கின்றவர்களின் சடலங்களைப் பாதுகாப்பான முறையில் அடக்கம் செய்வதன் ஊடாக, எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை முஸ்லிம்கள் தங்களது கலாசாரத்தின் அடிப்படையில் கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்களைப் புதைப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சு நடத்தி விரைவான தீர்மானம் ஒன்றுக்கு வர வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# தில்லைக் கூத்தனை ஈழத்துச் சிதம்பரத்திலே காணும் நாள் வாராதோ?

● இராணி வைத்தீசுவரக்குருக்கள் (கந்தரோடை, சுன்னாகம்)

**இன்று திருவெம்பாவை விரதம் ஆரம்பம். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

### நடராச திருக்கோலச் சிறப்பு

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் திருநடனஞ் செய்யும் அற்புதத் திருக்கோலமே நடராச மூர்த்தம். நடராசப் பெருமானின் சிறப்பம்சங்களை இரு வகையாகப் பிரித்துக் கூறலாம்.

ஒன்று: அதன் அமைதி, மற்றது: அது உணர்த்தும் தத்துவம். குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, நடனத்துக்கென எடுத்த பொற்பாதம், குளிர்ந்த கங்கையும் பிறையுஞ் சூடிய சடை என்பவற்றோடு கூடிய புனிதமான பேரழகுப் பிழம்பாய் விளங்குகின்றது. சிற்பம், சாத்திரம், ஆகம விதி என்ற மூன்றும் சங்கமித்த மகோன்னதமான திருவுருவமே நடராசத் திருக்கோலம்;திருவாசியைப்பின்னணியாகக்கொண்டு நடனத்துக்கெனத் தூக்கிய இடது திருப்பாதம், நடனக் கலைஞர்களுக்கே உரிய ஒடுங்கிய இடை, விரிந்த மார்பு என்பவற்றோடு அருள் பாலிக்கும் வகையில் அமைந்த தன்மையும் பொருந்தி விளங்கும் சிறப்புடையது.




பிரபஞ்சத்தின் தோற்றம், நிலை பேறு, ஒடுக்கம் என்ற யாவும் நடராசப் பெருமானின் நடனத் திருக்கோலத்திலேயே உருக்கொண்டு விளங்குகின்றது. எம்பெருமான் ஆடி அருளிய அற்புத நடனங்கள் பல. அவற்றுள் ஒன்று சொக்கத் தாண்டவம் எனப்படும். இது சுந்தரத் தாண்டவம் எனவும் பெயர் பெறும். இது நூற்றியெட்டுக் கரணங்களைக் கொண்டது என்று கூறுவர். பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்கள் இருவரும் நடராசப் பெருமான் ஆடிய சொக்கத் தாண்டவத்தைக் கண்டு களிக்கும் பேறு பெற்றவர்கள்.

### நடராச மூர்த்தம் உணர்த்தும் தத்துவம்

நடராசரின் வடிவம் உத்தம தசகால அளவு கொண்டதாக அமைக்கப்படல் வேண்டும். முன் இடக்கை தண்டாக நீண்டு உடம்பை சாரும் வண்ணம் திரும்பி உடம்பின் முன்னர் சிறிது வளைந்து தொங் குதல் வேண்டும். பின் பக்கத்தில் உள்ள திருக் கரத்தில் அக்கினி அமைந்திருக்கும். இவ் வக்கினி கை விரலின் நடுவிலோ அல்லது விரலின் அடியிலோ அல்லது நுனியிலோ அமைக்கப்படுவதாய் இருக்கும். வலது திருக்கரம் அபயகரமாக முழங்கையை மடித்து அகங்கையை விரித்த கோலத்தில் அமைக்கப்படும். நடு விரலின் நுனி அகங் கையில் மடித்த நிலையில் பதிக்கப்பட்டு இருக்கும். இக் கையின் மணிக்கட்டில் பாம்பு கடகமாக (காப்பு) அணியப்பட்டிருக்கும். கழுத்திலும் உச்சிக் கொண்டையிலும் பாம்பாபரணம் அமைந்திருக்கும். பின் வலது கையில் உடுக்கை காணப்படும். வலது கால் புவியில் மடங்கிய நிலையில் முயலகன் என்ற அரக்கன் மீது பதிந்திருக்கும். இடது கால் வலது கால் பக்கம் நோக்கிய படி மேலே தூக்கி மடிந்தபடி காட்சி தரும். கால் விரல்கள் கீழே தொங்குவது அவசியம். இந் நிலையில் தொங்கும் பாதம் குஞ்சிதபாதம் என்று அழைக்கப்படும்.



நடராசப் பெருமானின் தலையிலே சடா மகுடம் விளங்கும். சடையின் உச்சியிலே மலர் மாலை அமைந் திருக்கும். அதனோடு எருக்க மலர்கள், பாம்பு, மண்டையோடு, பிறைச்சந்திரன் ஆகியனவும் காட்சி தரும். சடா மகுடத்தில் தொங்கும் சடைகள் 5, 6, 7, 11 ஆகிய எண்ணிக்கை கொண்டன. மேனியிலே பூணூல் அழகுறத் தோன்றும். நடுவிரல் தவிர்ந்த மற்றைய விரல்களிலே மோதிரங்கள் அணியப்பட்டிருக்கும். கால்களிலே சதங்கைகள் காணப்படும். இடையில் புலித்தோலாடை பொலிந்து காணப்படும். உதடுகளிலே மாறாத புன்னகை இருக்கும். ஆடும் கோலத்திலுள்ள ஆடல் வல்லான் நடராசப்பெருமானின் இடது பக்கத்திலே சிவகாமி அம்பாள் நின்ற கோலத்திலே காட்சி தருவாள். ஆடல் வல்லானின் ஆடல் வகைகள் ஒன்பது என்று ஆகமங்கள் கூறுகின்றன. மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றான உண்மை விளக்கம் நடராசப் பெருமானின்நடனத்தத்துவத்தை விளக்கிக் கூறுகின்றது. சாங்கம், உபாங்கம் ஒவ்வொன்றுக்கும் தத்துவ விளக்கம் இந்நூலிலே காணப்படுகிறது.

சிவபெருமான் தன் துடியினால் ஒலி உண்டாக்கி படைத்தல் தொழிலைச் செய்கின்றான்; படைத்தவற்றை தன் அபயகரத்தால் காக்கின்றான்; அழல் ஏந்திய கையால் அழிக்கவும் செய்கின்றான் தூக்கிய திருவடியால் ஆன்மாவுக்குச் சிவஞானம் கைவர அருள் புரிகின்றான் ஊன்றிய திருவடியால் மறைத்தல் தொழிலையும் புரிகின்றான். சிவன் என்றும் மும்மலங்களில் இருந்தும் நீங்கியவன் என்பதை தான் மிதித்து நின்றாடும் முயலகனால் உணர்த்துகின்றான். திருவாசி ஓங்காரமாகிய பிரணவத்தைக் குறிக்கும். அதன் சுடர்கள் சக்தியைக் குறிக்கும்.

நடராசப் பெருமானது வடிவில் முப்பத்தாறு தத்துவங்களும் ஐம்பத்தொரு அட்சரங்களும் 'சிவாயநம' என்ற ஸ்ரீ பஞ்சாட்சரமும் விளங்கி அடியவர்களை ஆனந்தப்படுத்துகின்றது.

நடராசர் திருவுருவம் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்தும் தத்துவம். தூலஇ சூக்கும பஞ்சாட்சர மந்திரங்களின் குறியீட்டு விளக்கம் மேல் வருமாறு:

ந – திருவடி
ம – திருவயிறு
சி – திருத்தோள்
வா – திருமுகம்
ய – திருமுடி

சிவானந்தத் தாண்டவம் – பிரபஞ்ச இயக்கம்

நடராசர் சக்தியோடு சேர்ந்து இயங்கினால் மட்டுமே உலகம் இயங்கும். 'சிவானந்த நடனம்' என்ற நூலில் நடராசரின் திருவுருவக் கலைச் சிறப்பு, தத்துவச் சிறப்பு என்பவற்றை கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் மிகவும் நுட்பமாகவும் சிறப்பாகவும் விளக்கி உள்ளார்.


சிவபெருமான் நடராசத் திருவுருவத்திலே கூத்தாடிய வண்ணம் உலகத்தைத் தோற்றம் செய்து காத்து, அழித்து, மறைத்து, அருள் செய்தலை மாணிக்கவாசக சுவாமிகள் தில்லைச் சிதம்பரத்தில் தீயாடும் கூத்தன் என்றும் தில்லை முதூர் ஆலய திருவடி என்றும், தென் தில்லை மன்றுள் ஆடிய திருவடி என்றும் பலவாறு அருளுவார். நடராசப் பெருமான் ஆடியருளும் அற்பு தக் கூத்து நினைக்குந்தொறும், காணுந்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்து என்பும் உள் நெக ஆனந்தத்தேன் சொரியும் குளிப்பு என்பர்.

**மானாட மழுவாட மதியாட புனலாட**
**மங்கை சிவகாமி யாட**
**மாலாட நூலாட மறையாட திறையாட**
**மறைதந்த பிரமனாட**
**கோனாட வானிலகு கூட்டமெல்லாமாட**
**குஞ்சர முகத்தனாட**
**குண்டல மிரண்டாட தண்டை புலி யுடையாட**
**குழந்தை முருகேசனாட**
**ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி**
**அட்ட பாலகருமாட**
**நரை தும்பை அருகாட நந்தி வாகனமாட**
**நாட்டியப் பெண்களாட**
**வினையோட உனைப்பாட எனைநாடிஇதுவேளை**
**விரைந்தோடி ஆடி வருவாய்**
**ஈசனே சிவகாமி நேசனே**
**எனையீன்ற தில்லைவாழ் நடராசனே!'**

என்று சிறுமணவூர் முனிசாமி முதலியார் தமது 'நடராசப் பத்து' பாடலில் தில்லைக் கூத்தனின் நடனத்தை பிரபஞ்ச நடனமாக வருணித்துப் பாடியுள்ளார்.

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ, ஆதிரைநாள் காணாது வாழ்வேனோ

தில்லைக் கூத்தனின் திருக்கூத்தினைக் கண்டு மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தவர் பலராயினும் சுந்தர மூர்த்தி நாயனார் கண்டு, தம்மை மறந்து பத்தி பரவச




நிலையில் நின்ற நிலையே எமக்கு எழிதிற் புலனாகின்றது.

**'ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே யாக**
**இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த**
**வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.'**

பெரிய புராணத்தில் சேக்கிழாரும் பின்வருமாறு பாடுகின்றார்.

(11 ஆம் பக்கம் பார்க்க....)

# தம்பலவத்தை தாம்போதியில் பீறிட்டுப்பாயும் வெள்ளம்





மட்டு.அம்பாறை மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொழிந்த பெருமழையினால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அம்பாறை - மட்டக்களப்பு எல்லையிலிருக்கும் தம்பலவத்தைதாம்போதியில்(கோஸ்வே) வெள்ளம்பீறிட்டுப் பாய்ந்தது. பொதுப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. ஜீப் போன்ற சில வாகனங்கள் சிரமத்தின் மத்தியில் பயணிப்பதைக் காணலாம்.

(படங்கள்: காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

## சட்டவிரோத மாடுவெட்டிகள் வவுனியாவில் கைதாகினர்

வவுனியா பட்டகாடு குளக்கட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாட்டினை இறைச்சிக்காக வெட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அப்பகுதிக்கு சென்ற வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் மாட்டை வெட்டி இறைச்சியாக்கிக்கொண்டிருந்த இருவரை கைதுசெய்துள்ளதுடன், இறைச்சியையும் மீட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த கைதுநடவடிக்கை தலைமை பொலிஸ் நிலைய உபபொலிஸ் பொறுப்பதிகாரி அழகிய வண்ணவின் வழிகாட்டலில், குற்றத்தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரனீத்தி சாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக சட்டவிரோதமான முறையில் மாட்டை அறுக்கும் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவுக்கு பின்னர் முதலாவது முறையாக இலங்கைக்கு வருகை தரும் ரஷ்ய சுற்றுலாக் குழு

கொழும்பு, டிசெ.21

எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதியன்று விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக இலங்கைக்கு வருகை தர ரஷ்ய சுற்றுலா குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

அதன்படி 200 இற்கும் மேற்பட்ட ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் அடங்கிய குழு 26 ஆம் திகதி கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களுக்கு வருகை தரவுள்ளது.

இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விமான நிலைய அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், பயண முகவர்களுக்கும் தேவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, விமான நிலையத்தில் கிருமி நீக்கம், சுங்க மற்றும் குடிவரவு நடவடிக்கைகள், அத்துடன் சுற்றுலா பயணிகளுக்கு ஹோட்டல்களை முன்பதிவு செய்தல் மற்றும் சுற்றுப்பயணத்துக்கு பஸ் ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் அவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர் என உபுல் தர்மதாஸ தெரிவித்தார்.

## சேறும் சகதியுமாகக் காணப்படும் கிளிநொச்சி மத்திய பஸ் நிலையம்



கிளிநொச்சி மத்திய பஸ் நிலையம் மற்றும் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் உள்ள கிளிநொச்சி மாவட்ட மத்திய பஸ் நிலையம் ஆகியன பயணிகள் பயன்படுத்த முடியாத மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன என பொது மக்களும், பஸ் உரிமையாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு பத்து வருடங்களை கடக்கின்றபோதும், கிளிநொச்சி மாவட்டத்துக்கான பஸ் நிலையத்தை அமைக்க முடியாத நிலைமை காணப்படுகிறது என்றும், கடந்த காலத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப் பணிகளை முன்னெடுக்க நிர்வாகம் மற்றும் அரசியல் தரப்புக்கள் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கும் பஸ் உரிமையாளர்கள்.

குறைந்தபட்சம் மழைக்காலங்களில் பயணிகள் சிரமம் இன்றி வந்து செல்வதற்கு ஏற்ற வகையில் சீரமைத்து தருமாறு கரைச்சி பிரதேச சபையிடம் நேரடியாக தெரிவித்தும், அவர்கள் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை.

மாறாக சுகாதார சீர்கேடுகள் நிறைந்த பிரதேசமாக காணப்படுகின்ற இந்த பகுதிக்குள் பிரதேச சபையினரால் புதிய வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், வெள்ள நீர் தேங்கி நிற்பதோடு அதற்குள் கழிவுகளும் சேர்ந்து ஓர் அருவருப்பான பிரதேசமாக மாவட்ட பஸ் நிலையம் காணப்படுகிறது.

பஸ் நிறுத்தி பயணிகளை சிரமமின்றி ஏற்றி இறக்க முடியாத பஸ் நிலையமாகவே இது காணப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தி பஸ் நிலையப் பகுதியைத் தற்காலிகமாவது சீர்செய்து தருமாறு கோரிக்கை விடுப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## மலையக பல்கலைக்கழகத்துக்கான இடம் தேவையான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது

மலையக பல்கலைக்கழகத்துக்கான இடமும் அதற்குத் தேவையான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் பல்கலைக்கழகம் வரவில்லை என விமர்சித்தவர்கள் தற்போது வாய் மூடி மௌனம் காக்கின்றனர்.

கொட்டகலை கடந்த 4 வருடங்களாக மறக்கப்பட்டிருந்தது. அபிவிருத்திகளை மேற்கொண்டால் அதன் பெயர் தொண்டமானுக்கு சென்று விடும் என்ற அச்சமே இதற்கு காரணம்.

மலையக பல்கலைக்கழகத்துக்கான இடமும் அதற்குத் தேவையான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் வரவில்லை என விமர்சித்தவர்கள் ஏன் இப்போது வாழ்த்த மறுக்கின்றனர்.

தற்போது மலையகத்தில் வீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சை பொறுப்பேற்கும் போது கொவிட் நிலைமை இலங்கையிலும், உலகத்திலும் பாரிய அச்சுறுத்தலாகக் காணப்பட்டது.

இவ்வாறான நிலைமையில் மக்கள் மிகுந்த பொறுமையுடன் உள்ளனர். இவ்வாறான நிலையிலும் அரச இயந்திரம் இயங்குகின்றது. கொரோனாவின் அச்சுறுத்தல் மலையகத்தை பாதித்துள்ளது. ஆயிரம் தொடர்பிலேயே பேசுகின்றனர்.

தொழிலாளர்களின் ஏனைய பிரச்சினைகள் காணாமல் போயுள்ளன. தோட்ட தொழில் கௌரவமற்றது என நினைக்கின்றமை தவறு. மாறாக அதை செய்விக்கின்ற முறைமையே தவறானது.

தோட்டத் தொழில்துறையை நவீனமயப்படுத்தி கௌரவித்தால் அந்த துறையை பாதுகாக்க முடியும். மலையக கல்வித் தரம் வீழ்ச்சிக்கு வழங்கல் இல்லாமையே பிரதான பிரச்சினை. சுகாதார வழிமுறைகளை முறையாகக் கைக்கொள்வதன் மூலமே கொவிட் தொற்றை மலையகத்திலிருந்து ஒழிக்க முடியும். - எனத் தெரிவித்துள்ளார்.

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மூடல் 45 ஆயிரம் மின்னியலாளர்கள் பாதிப்பு

கொழும்பு, டிசெ.21

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவை மூடுவதற்கு எடுத்துள்ள நடவடிக்கையால் சுமார் 45 ஆயிரம் மின்னியலாளர்கள் பாதிக்கப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத்துறையின் பாதுகாப்புக்காகவும் மின்சார நுகர்வோரது பாதுகாப்புக்காகவும் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருவதாக இலங்கை மின்னியலாளர்கள் சங்கத்தின் இணைப்பாளர் சஞ்சீவ தம்மிக்க சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

மின்சார நுகர்வோர் அன்றாடம் எதிர்கொள்ளும் மின்சார தாக்கம், மின்சார மரணங்கள் ஆகியவற்றைக் குறைக்கும் முகமாக இலங்கையிலுள்ள அனைத்து மின்னியலாளர்களையும் ஒன்றிணைத்து அவர்களுக்கு உரிமம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தில் இதுவரை 20 ஆயிரம் மின்னியலாளர்கள் தமக்கான உரிமத்தை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளனர்.

இன்னும் சுமார் 25 பேருக்கு இந்த விடயம் தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் விண்ணப்பிக்கவுள்ளனர்.

கடந்த ஒக்ரோபரில் மின்னியலாளர்களுக்கான உரிமங்களை வழங்குவதற்கான தொடக்க விழாவை பிரதமரின் தலைமையில் கீழ் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஆனால், கொரோனாவின் இரண்டாவது அலை காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டதாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மாவட்ட அளவில், மின்னியலாளர்களுக்கான உரிமம் வழங்கும் முறை தொடர்பாகத் தற்போது எந்தத் திட்டங்களும் நடத்தப்படவில்லை.

இந்த திட்டத்தின் கீழ், இலங்கையின் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் தேசிய தொழில் பயிற்சி ஆணைக்குழு ஆகியவை இணைந்து தேசிய தொழில் தகுதி நிலை 3 இலவசமாக வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

மாவட்ட அளவில் பணிபுரியும் மின்னியலாளர்களை பதிவு செய்வதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். இந்த திட்டங்கள் எதுவும் தற்போது செயலில் இல்லை.

இந்த உரிமம் திட்டத்தின் கீழ், ஒரு மின்னியியலாளர் தனது தொழிலில் பதவி உயர்வு பெற வாய்ப்பு உள்ளது.

இந்த தொழில்முறை உரிமத் திட்டம் மின்னியியலாளரை ஆரம்ப, பயிலுனர், கனிஷ்ட, சிரேஷ்ட, சிறப்பு மற்றும் பொது ஆகிய பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கிறது.

இருப்பினும்,இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை மூடுவதன் நோக்கம் மின்சாரதுறையின் மாபியாவை விருப்பப்படி மின்சாரத்தை கொள்முதல் செய்வதன் மூலம் மின்சார நுகர்வோர் மற்றும் மின்னியியலாளர்களின் உரிமைகளைச் சுரண்டுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார் .

# கொரோனாவை இல்லாதொழிக்க சிறிது காலம் தேவைப்படும்!

## என்கிறார் பாதுகாப்பு அமைச்சு செயலர்



நாட்டிலிருந்து கொரோனாவை இல்லாதொழிக்க சிறிது காலமாகலாம் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை சுகாதார வழிகாட்டுதல்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ள அவர், நோய் தொடர்பான தகவல்களை மறைக்கவேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமூக நிகழ்வுகளில் ஒன்றுகூடுவதைப் பொதுமக்கள் தவிர்க்கவேண்டும் எனவும் வீடுகளில் இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்கள், முதியவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தவேண்டும் எனவும் பாதுகாப்பு செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் முப்படையினரும் சுகாதார அதிகாரிகளும் நாட்டிலிருந்து கொரோனாவை ஒழிப்பதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் எனவும் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட பகுதியை அடையாளம் கண்டபின்னர் சுகாதார அதிகாரிகளும் புலனாய்வு பிரிவினரும் நோய் எவ்வாறு பரவுகின்றது என்பதை கண்டுபிடித்து அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றனர் எனவும் அதன் பின்னர் அந்த பகுதியை முடக்குவதற்கு அல்லது தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக கல்முனையில் கொட்டும் மழையிலும் போராட்டம் நடந்தது!

ஜனபஸா எரிப்புக்கு எதிராக வெள்ளை துணி கவனலீர்ப்பு போராட்டம் கல்முனையில் கொட்டும் மழைக்கு மத்தியில் இன்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கல்முனை தொகுதி முன்னாள் அமைப்பாளரும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான வெஸ்டர் ஏ.எம்.றியாஸின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கிழக்கு தேச விடுதலை இயக்கத்தின் தலைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக பொருளாளருமான வஃபா பாருக் உள்ளிட்ட அரசியல், சமூக, பொதுநல, ஊடக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஜனாஸா எரிப்புக்கு எதிரான வாசகங்கள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டன.

ஜனஸாவை அடக்க அனுமதி தா, நல்லடக்கம் எங்கள் அடிப்படை உரிமை அதை மறுப்பது சர்வாதிகாரம், விஞ்ஞானத்தை ஏற்று கொள் இனவாதத்தை கை விடு, இனவாதிகள் அல்லர் நிபுணர்கள் சொல்வதை கேட்டு நட, இனவாதமாக இல்லாமல் விஞ்ஞானரீதியாக செயற்படு போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.




பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் நேர காலத்துடன் போராட்டம் நிறைவுற்றது.

# வலப்பனை – கண்டி பிரதான வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது!

மண்சரிவு எச்சரிக்கை காரணமாக மலபத்தாவ பகுதியின் வலப்பனை - கண்டி பிரதான வீதி கடந்த சனிக்கிழமை இரவு முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக நுவரெலிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வீதி மீண்டும் திறக்கப்படும் வரை சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக மலபத்தாவ பகுதியில் கடந்த சனிக்கிழமை 75 மி.மீ இற்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

சமூக நல அறிவிப்பு



## கொரோனா பற்றி நிதானமாகச் சிந்தியுங்கள்

24 மணி நேரத்துக்குள் மூன்று அல்லது நான்கு முறை தொடர் இருமல் வரும். இந்த அறிகுறி இருந்தால் கொரோனா வைரஸ் தொற்றாகவும் இருக்கலாம்.

### கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள் என்ன?

* புதிதாக, தொடர்ச்சியான இருமல். ஒரு மணி நேரத்துக்கும் மேல் அந்த இருமல் தொடரும் அல்லது 24 மணி நேரத்துக்குள் மூன்று அல்லது நான்கு முறை தொடர் இருமல் வரும்.
* காய்ச்சல். உங்கள் உடல் வெப்பம் 37.8 டிகிரி செல்ஸியசை விட அதிகமாகும்.
* வாசனை அல்லது சுவையை உணர முடியாமல் போகலாம்.
* கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் நபர்களில் குறைந்தது 85% பேருக்கு மேற்கண்ட மூன்று அறிகுறிகளில் ஒன்று தென்படும் என்று இங்கிலாந்து பொது சுகாதாரத் துறை தெரிவிக்கிறது.

கொரோனா வைரஸ் கிருமியானது காசுக் கொடுக்கல் வாங்கல்களின் போதும் தொற்றை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதனால், நீங்கள் எப்போதும் காசுக் கொடுக்கல் வாங்கல்களின் போது கேட்கப்படும் தொகையை மட்டும் கொடுக்கக் கூடிய வகையில் மாற்றிய காசுகளுடன் தயாராகச் செல்லுங்கள்.

சுகாதாரத் துறையினரால் மேற்கொள்ளப்படும் 14 நாள்களுக்கான தனிமைப் படுத்தல் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் வழங்குங்கள்.

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-



# நாட்டின் மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் அன்பின் செய்தியை காத்தவர்கள் கிறிஸ்தவர்




பிரதமர் மஹிந்த பெருமிதம்

நமது நாட்டின் கிறிஸ்தவ மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலையிலும் மனி தத்துவத்தின் மீதான அன்பின் செய்தியை பாதுகாத்துள்ளனர் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை குருநாகல் மறைமாவட்ட புனித பாத்திமா அன்னை தேவாலயத்தில் இடம்பெற்ற நத்தார் தின அரச நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவித்தார்.

இவ்வாறான கடினமான காலப்பகுதியிலேயே பக்தி, அன்பு மற்றும் நம்பிக்கையின் உணர்வு என்பன நாட்டுக்கு அவசியமாகின்றன. மதத்தின் வழியே வாழும் சமூகமொன்றை உருவாக்குவதற்கு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு அரசு ஒருபோதும் தயங்காது என்றும் குறிப்பிட்டார்.

இதன்போது அகில இலங்கை கத்தோலிக்க அறநெறி பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் பிரதமர் மற்றும் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவால் வழங்கிவைக்கப்பட்டன.

அங்கு உரையாற்றிய பிரதமர் -

இதற்கு முன்னர் அரச நத்தார் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, மன்னார் போன்ற நகரங்களை மையமாகக் கொண்டே இடம்பெற்றன. எனினும், இம்முறை நத்தார் தின அரச நிகழ்வுகளை குருநாகலில் கொண்டாடுகின்றோம்.

நத்தார் தின அரச நிகழ்வுகளை குருநாகலில் கொண்டாடுவதற்கு அனுமதியளித்தமை தொடர்பில் முதலில் ஆயர் சம்மேளனதத்துக்கு மிகுந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன். அதேபோன்று என்னை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்த மாவட்டத்தின் கிறிஸ்தவ மக்களுக்கு இவ்வாறானதொரு வாய்ப்பு கிடைத்தமை தொடர்பாக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கத்தோலிக்க மக்கள் போன்று கிறிஸ்தவ மக்களுடன் இணைந்து புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இதுபோன்ற நத்தார் தின அரச நிகழ்வொன்றை நடத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சமாதானத்தின் செய்தியை உலகிற்கு தெரியப்படுத்துவதையே நாம் அனைவரும் செய்கின்றோம். இவ்வாறு நாம் அனைவரும் இணைந்து நத்தார் பண்டிகையை கொண்டாடுவதன் மூலம் உலகிற்கு முன்னுதாரணமாக விளங்குகிறோம்.

இம்முறை நத்தார் பண்டிகையை கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்களுக்கு வழமைபோன்று கொண்டாட முடியாது. வேறு நாள்களில் நத்தார் தின பிரார்த்தனைகளின்போது பெருந்தொகையானோர் கலந்து கொள்வர். அதேபோன்று உற்றார் உறவினர்களுடன் ஒற்றுமையாக, நட்பை பரிமாறிக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. எனினும், இன்று அவ்வாறு செய்ய முடியாது. இன்று முகக்கவசம் அணிவது காரணமாக அயலவர்களுடன் புன்னகைப்பதற்கேனும் வாய்ப்பின்றியுள்ளது. அந்த வெளி நிகழ்வுகள் இல்லாத போதிலும், எவ்வாறான தடைகள் காணப்படினும், பிரச்சினைகள் இருப்பினும் அயலவர்கள் மீது உங்களது இதயத்தில் உள்ள அன்பில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை நான் அறிவேன். இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையின் போதே கத்தோலிக்கர்களாகிய உங்களுக்குள் காணப்படும் பக்தி, அன்பு மற்றும் நம்பிக்கை உணர்வு என்பன இந்த நாட்டுக்கு முக்கியமானதாக அமைகின்றது.

இன்றுநமக்குமாத்திரமின்றிஉலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் சுகாதார பரிந்துரைகளுக்கு முன்னுரிமை வழங்கியே அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய இலங்கை கத்தோலிக்க மக்கள் சுகாதார பரிந்துரைகளுக்கு அமைய செயற்படுகின்றமை தொடர்பில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கத்தோலிக்க, கிறிஸ்தவ மக்கள் புத்திசாலித்தனம் மிகுந்தவர்கள். தூர நோக்குடையவர்கள். தங்களது மதத்தின் சம்பிரதாயங்கள், சடங்குகளுக்கு மேலாக பொது மனித இனம் பற்றி இந்த நெருக்கடியான தருணத்தில் சிந்திக்க கத்தோலிக்க மக்கள் தூண்டப்படுவார்கள் என்று நான் அறிவேன். கத்தோலிக்க மக்கள் முழு உலகிற்கும் கூறும் முக்கியமான நத்தார் செய்தியே இந்த பொது மனிதன் குறித்த உணர்வாகும்.

நமது நாட்டின் கிறிஸ்தவ மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலையிலும் மனி தத்துவத்தின் மீதான அன்பின் செய்தியை பாதுகாத்தனர். அதாவது 2019 ஏப்ரல் 21ஆம் திகதி, உங்களது பல முக்கியமான தேவாலயங்கள் போன்று கொழும்பின் முன்னணி ஹோட்டல்கள் மூன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண் டாடுவதற்காக தேவாலயங்களில் கூடியிருந்த பக்தர்களாவர். இது ஆசியாவில் மாத்திரமின்றி, சர்வதேச மட்டத்திலும் சிவில் மக்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட கொடிய பயங்கரவாதத் தாக்குதலாகும். பேராயர் அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கோரிக்கைக்கு அமைய அனைவரும் அமைதியாக செயற்பட்டு உலகின் பாராட்டைப் பெற்றோம்.

வெறுப்பு வெறுப்பை தணிக்காது என்று புத்தபெருமான் கூறியுள்ளார். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை திருப்பி காட்டுமாறு இயேசு கிறிஸ்து தெரிவித்துள்ளார். கடந்த உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் முழுமையாக அரசால் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுமாறு நான் அறிவுறுத்தினேன். அதேபோன்று தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம்.

கடந்த வாரம் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. நத்தார் தின அரச நிகழ்வை முன்னிட்டு இப்பிரதேச தேவாலயங்கள் மற்றும் அறநெறி பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூற விரும்புகிறேன். எமக்கு மதச்சார்பற்ற நாடு தேவையில்லை. அவ்வாறு மதம் வேண்டாம் என்பவர்களுக்கு கடந்த காலத்தில் சிறந்த பதில் கிடைத்தது. சமய ஒழுக்கவிதிகளுக்கு அமைய வாழும் சமூகமொன்றே எமக்கு வேண்டும். சமய விழுமியங்களுக்கு அமைய செயற்பட்டாலேயே அவ்வாறான சமூகமொன்றை உருவாக்க முடியும். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் தயாராகவிருக்கின்றோம். பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் இந்நாட்டு மக்களை தேவாலயத்துக்கு, விகாரைக்கு, ஆலயத்துக்கு மிகுந்த நெருக்கமடைய செய்வதன் ஊடாக மதிப்பு நிறைந்த மக்கள் சமூகமொன்றை உருவாக்குவதே எமது முக்கிய நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# படகுப் போக்குவரத்தில் ஈடுபட தரமான படகுகளை தந்துதவுக

## தீவுபகுதி படகோட்டிகள் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை



படகுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற எமது படகுகள் தரமற்ற நிலையில் காணப்படுகின்றமையால் எமக்கு இலவசமாகவோ அல்லது மானிய அடிப்படையிலோ தரமான படகுகளைத் தந்துதவுமாறு படகு சேவையில் ஈடுபட்டு வருபவர்கள் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ் தீவகம் ஊர்காவற்றுறையில் இடம்பெற்றுவரும் படகுச் சேவைகள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தாங்கள் பயன்படுத்தி வரும் படகுகள் அனைத்துமே தரம் அற்றவையாகக் காணப்படுகின்றமையால் தமக்கு இலவசமாகவோ, மானிய அடிப்படையிலோ வழங்கவேண்டும் என்றும், இல்லையேல் தங்கள் படகுகளைச் சீரமைத்து தரவேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை முன்வைத்தனர். இதற்கு இராஜாங்க அமைச்சர் தாம் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி சாதகமான முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது.



# அமைச்சரவைக்குள் கொரோனா பணியாளர்கள் நால்வர் பாதிப்பு

## பெரும் குழப்பத்தில் கோட்டா; இணையவழி மூலம் கூட்டம்



அமைச்சரவை செயலகத்தில் பணிபுரியும் நான்கு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்துப் பெரும் குழப்பமடைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் களமிறங்கியுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று இன்று பரபரப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாகவே அண்மைய அமைச்சரவை சந்திப்புக் கள்கூட இணையவழி ஊடாக நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் இணையம் மூலமாக அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தும் அரசின் செயற்பாட்டுக்கு அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

இது தொடர்பில் முக்கிய அமைச்சர் ஒருவரைத் தொடர்புகொண்டு கேட்ட போது, வீட்டுக்குள்ளேயே கொரோனா வந்துவிட்டது. அந்த வகையில் அமைச்சரவைக்குள் கொரோனா புகுந்தது ஆச்சரியம் அல்ல. அமைச்சர்களைக் காப்பாற்றவே இணையவழி ஊடான சந்திப்புக்களை ஜனாதிபதி நடத்தி வருகின்றார் என்று பதிலளித்தார்.



## ஆறு கோடி ரூபா பணத்துடனும் ஹெரோயினுடனும் மூவர் கைது

போதைப்பொருள் கடத்தல்காரர்களிடமிருந்து சுமார் 6 கோடி ரூபா பணம் மற்றும் ஒரு தொகை ஹெரோயின் ஆகியன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவின் கடுவளை, வெலிவிட்ட மற்றும் மாலம்பே பகுதிகளில் நேற்றிரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தச் சுற்றிவளைப்புகளின் போது பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கடுவளை மற்றும் தலங்கம - பத்தரமுல்ல பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும், 37 வய தான பெண் நுகேகொடை பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சந்தேகநபர்களிடமிருந்து 300 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கைதுசெய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேகநபராகக் கருதப்படும் ஹேவாகம பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரிடமிருந்து 5 கோடியே 90 லட்சம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளன என் றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புகளில், சந்தேகநபர் ஒருவரிடமிருந்து பெருந்தொகையான பணம் கைப்பற்றப்பட்டமை இதுவே முதல் தடவையாகும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

## உள்ளூர் துப்பாக்கியுடன் மூவர் வசமாக மாட்டினர்!



விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி மாவட்டம், வட்டக்கச்சி - மாயவனூர் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு உள்ளூர் துப்பாக்கிகளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர். நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணையின் பின்னர் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவர் என்று தருமபுரம் பொலிஸார் மேலும் கூறினர்.

## 7,479 கைதிகள் விடுவிப்பு! கடந்த 17 நாள்களில் மட்டும்

நாட்டில் கடந்த 17 நாள்களில் சிறைக்கைதிகள் மற்றும் சந்தேகநபர்கள் 7 ஆயிரத்து 479 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் 6 ஆயிரத்து 915 சந்தேகநபர்கள் அடங்குகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஏனையோர் சிறைத் தண்டனை பெற்றவர்கள் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைக் குறைக்கும் நோக்கில் அரசால் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் கீழ், இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

## மருதனார்மடம் கொத்தணியில் மேலும் இருவருக்குத் தொற்று!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மருதனார்மடம் கொத்தணியில் இன்று மேலும் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

அவர்கள் இருவரும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று வடக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக பரிசோதனைக் கூடத்தில் இன்று 120 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மருதனார்மடம் கொத்தணியில் மொத்தமாகத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

# பொதுமக்கள் ஒத்துழைக்காவிட்டால் சாவு எண்ணிக்கை அதியுச்சமடையும்

## தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு எச்சரிக்கை

பொதுமக்களின் நடத்தை அடிப்படையிலேயே எதிர்காலம் தீர்மானிக்கப்படும். எனவே, சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றி மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் கொரோனா வைரஸ் பரவல் எமது கட்டுப்பாட்டை மீறி, ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிலைமை இலங்கையிலும் உருவாகக்கூடும். உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதியுச்சமடையும்.

-இவ்வாறு தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வழமையாக டிசம்பரில் இறுதி இரு வாரங்களிலும், ஜனவரி முதல் வாரத்திலுமே நாட்டில் அனைத்து பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும். அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் நீண்டதொரு விடுமுறை வழங்கப்படுவதால் உறவினர்களின் வீடுகளுக்கு செல்லுதல், கொள்வனவுகளில் ஈடுபடுதல், சுற்றுலா செல்லுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இக்காலப்பகுதியில் வீடுகளில் இருப்பவர்களைவிடவும் வெளியில் பலர் இருப்பார்கள். ஆனால், இம்முறை அவ்வாறு செயற்பட முடியாது - செயற்படவும் கூடாது. மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டிய காலப்பகுதி இதுவாகும்.

குறிப்பாக மேல் மாகாணத்திலும், கொழும்பு மாநகர எல்லையிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. எனவே, இப்பகுதிகளில் இருந்து வெளியிடங்களுக்குச் சென்றால், அவ்வாறு செல்பவர்களில் எவருக்காவது வைரஸ் தொற்று இருந்தால் அவர்கள் செல்லும் பகுதிகளிலும் கொரோனா கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.

எனவே, நோய் அறிகுறிகள் தென்பட்டால் வைத்திய ஆலோசனை பெறவும். முடிந்தளவு வீட்டிலேயே இருக்கவும். வயது வந்தவர்கள், நாட்பட்ட நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் வெளியில் வருவதை தவிர்த்துக்கொள்வதே பாதுகாப்பானதாக இருக்கும். அத்துடன் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை கழுவுதல் போன்ற சுகாதார பழக்கவழக்கங்கள் தொடர்ச்சியாக பின்பற்றப்படவேண்டும்.

ஏனெனில் மக்களின் நடத்தையை பொருத்தே எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.

அதேவேளை, உலகில பல நாடுகளில் கட்டுப்பாட்டைமீறி நாளாந்தம் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. இலங்கையில் இன்னும் அவ்வாறான தொரு நிலைமை உருவாகவில்லை. கட்டுப்படுத்திக்கொள்ளக் கூடிய நிலைமையே காணப்படுகின்றது. இதனால்தான் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள அனைத்து மக்களும், நிறுவனங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினால் வைரஸ் பரவலை நிச்சயம் கட்டுப்படுத்தமுடியும். பரவலை குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அவ்வாறான ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் வைரஸ் பரவல் என்பது எமது கட்டுப்பாட்டைமீறி மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பரவியது போல் வேகமாக பரவக்கூடும். உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதியுச்சமடையும் -என்றார்.

## வவுனிக்குளத்தில் காணாமல்போன தந்தையும் மகளும் சடலங்களாக மீட்பு



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு-வவுனிக்குளத்தில்வாகனம்கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காணாமல் போன தந்தையும் மகளும் இன்று அதிகாலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மல்லாவி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வவுனிக்குளத்தில் நேற்று மாலை 4 மணியளவில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம் ஒன்று குளத்தில் வீழ்ந்து மூழ்கியுள்ளது.

இதன்போது கப் வாகனத்தின் சாரதியான கிருஷ்ணபிள்ளை ரிசிந்திரன் (வயது 38), அவரின் மகளான ரிசிந்திரன் சாருஜனா (வயது 2) மற்றும் ரவீந்திரகுமார் சஞ்சீவ் (வயது 12) ஆகிய மூவரும் நீரில் மூழ்கி காணால் போயிருந்தனர்.

நேற்று மாலை 5 மணியளவில் 12 வயது சிறுவன் மீட்கப்பட்ட நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்திருந்தார்.

அதன் பின்னர் சாரதியையும், இரண்டு வயதான பெண் குழந்தையையும் தேடும் பணிகள் தொடர்ந்தன. இந்நிலையில், இன்று அதிகாலை அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

அதிவேகம் காரணமாக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவித்த மல்லாவி பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 2021 ஏப்ரலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல்!

## நடத்த அரசு திட்டம்



அடுத்த ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், அதனை பழைய முறைப்படி நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளன.

மாகாண சபைத் தேர்தல்கள் பழைய முறையின்படி நடத்தப்படுவது தொடர்பாக ஏற்கனவே அமைச்சரவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்

கடந்த வாரம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேர்தல் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு, விரைவில் மாகாண சபை தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

கொவிட் – 19 வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கும் அதே வேளையில், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு கட்டாய நடவடிக்கைகளை எடுக்கவும், வரவிருக்கும் தேர்தல்களின் சட்ட கட்டமைப்பைக் கருத்தில் கொள்ளும‌ாறும் பிரதமர் தேர்தல் ஆணையததுக்கு அறிவுறுத்தினார்.

எவ்வாறெனினும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட விதிகள் தொடர்பாக ஆராயும் பணிகளை தேர்தல் ஆணையம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நயவஞ்சக ஆட்சியே இது!

## போட்டுத் தாக்குகின்றார் வேலுகுமார் எம்.பி.



மலையகத்தில் அரச பெருந்தோட்டங்களின் கீழுள்ள காணிகளை வெளியாருக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை இல்லாமல்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது பெருந்தோட்ட மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும். சொல்லில் ஒன்றையும் செயலில் வேறொன்றையும் செய்யும் நயவஞ்சக ஆட்சியே இது என்பது தற்போது புரிந்துவிட்டது.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான நாகஸ்தன்ன தோட்டத்திலுள்ள காணிகளை வெளியாருக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கான அளவைப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இது பற்றி மக்களுக்கோ அல்லது உரிய தரப்புகளுக்கோ அறிவிக்காமல் மிகவும் சூட்சுமமான முறையிலேயே திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கண்டி மற்றும் கேகாலை ஆகிய இரு மாவட்டங்களுக்கும் உட்பட்டதாக குறித்த தோட்டம் இருந்து வருகின்றது. இவ்வாறான நயவஞ்சக நடவடிக்கைகளால் இப்பகுதியில் உள்ள பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சியின்போது பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு தனி வீடுகள் அமைப்பதற்கான காணிகள் ஒதுக்கப்பட்டு, மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன், எஞ்சிய காணிகள் அம்மக்களுக்கே தலா 2 ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது. அதனைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்வேளையில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

எனினும், இந்தத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என ஆளுங்கட்சி அமைச்சர்கள் அண்மையில் நாடாளுமன்றத்தில் உறுதியளித்தனர். அவ்வாறு உறுதியளித்துவிட்டு இன்று காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுப்பது பெருந்தோட்ட மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும். சொல்லில் ஒன்றையும் செயலில் வேறொன்றையும் செய்யும் நயவஞ்சக ஆட்சியே இது என்பது தற்போது புரிந்துவிட்டது.

எமது மக்களுக்கான காணி உரிமையை தாரை வார்க்க முடியாது. எனவே, வெளியாருக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும வழங்கும் நடவடிக்கை உடன் நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் மக்கள் படை திரட்டி போராடிவேண்டிய நிலை உருவாகும் என்பதனையும் கூறிவைக்க விரும்புகின்றோம் – என்றார்.

# தில்லைக் கூத்தனை...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**‘இறவாத இன்ப அன்பு**
**வேண்டிப்பின் வேண்டு கின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டும்நான் மகிழ்ந்து பாடி**
**அறவாநீ ஆடும் போதுன்**
**அடியின்கீழ் இருக்க என்றார்**

‘ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே’ என்ற உண்மைக்கிசைய அவன் ஆட ஆன்மாக்கள் ஆடுகின்றன. அவன் அருளாலே அவன் தாள் வணங்குகின்றன. ஆடல் வல்லான் நடராசப் பெருமானுக்கு ஆண்டொன்றில் ஆறு அபிடேகங்களும் தேவர் நாளில் வரும் ஆறு பொழுதுகளின் அமைப்பிலேயே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவை மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் நடைபெறுகின்றன.

**சித்திரையில் ஓணமுதற் சீரானி யுத்திரமாம்**
**சத்தனு வாதிரையுஞ் சார்வாகும் - பத்திவளர்**
**மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி மன்**
**றீசரபி கேதின மாம்**

மேற்கண்ட பாடல் இதனை விளக்குகின்றது. நடராசப் பெருமானுக்கு ஆண்டில் ஆறு தினங்கள் மட்டுமே அபிடேகம் நடைபெறும். சித்திரைத் திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி சதுர்த்தசி, புரட்டாசி சதுர்த்தசி, மார்கழி திருவாதிரை, மாசி சதுர்த்தசி ஆகிய நாள்களில் இந்த அபிடேகங்கள் நடைபெறும்.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் படைத்தல் , காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில்களை நிகழ்த்தவும் அடியவர்களுக்கு அருள் புரியவும் ‘லிங்க’ வடிவிலிருந்து அருளுருவத் திருமேனியராக –நடராசப் பெருமானாக வடிவம் கொண்ட நன்னாள் மார்கழித் திருவாதிரை நாளாகும். மார்கழித் திங்கள் புனிதமான மாதமாகும். அதனை தெய்வத் திங்கள் என்றும் கூறலாம். மார்கழித் திங்களில் முறைப்படி தினமும் தெய்வ வழிபாட்டினை செய்வதால் ஆண்டு முழுவதும் இறைவனை வழிபட்ட பலன் கிடைக்கும்.

மார்கழித் திருவாதிரை வைகறை நடராசர் தரிசனம் மிகவும் சிறப்புடையது. இது ஆருத்திரா தரிசனம் எனப்படும்.

‘ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்’ என்று திருவாதிரை விழாவினைக் காண்பது மனிதப் பிறவியின் நோக்கம் என்று கூறிப் பூம்பாவையை அழைக்கிறார் திருஞானசம்பந்தர். ஆதிரை நாளில் நடராசப் பெருமானின் அற்புத நடனத்தைக் காணத் தில்லைச் சிதம்பரத்திலே பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர்.

‘சிதம்பரம் போகாமல் இருப்பேனோ – நான் ஜென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ’ என்று கோபால கிருஷ்ண பாரதியார் பத்திப் பரவசத்தில் பாடியருளினார்.

இன்று நாம் எங்கே போவோம்?

சிதம்பர தரிசனத்தை நமது ஈழநாட்டிலே காண்பதற்குக் காரைநகர் மக்கள் எப்பவோ வசதி செய்து விட்டார்கள். அவர்களுக்கு ஊரிலேயே சிதம்பரம் இருக்கிறது. அது தான் ஈழத்துச் சிதம்பரம்.

இத் தலத்தில் உள்ள நடராசப் பெருமானது விக்கிரகம் அற்புதமானது. இங்குள்ள நடராச மூர்த்தியின் திருவுருவம் பதஞ்சலிஇ வியாக்கிரபாதர் என்னும் முனிவர்களுடன் கூடியது. இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடராசர் அம்பிகா சமேதராக அமைந்திருக்கும் பாவனையில் உள்ள திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தலத்தில் மாத்திரமே உண்டென மூர்த்தி அமைப்பு முறைகளில் நிரம்பிய அறிவுள்ள திரு.தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் கூறியுள்ளார்.

தமிழக அறிஞர்களான சித்தாந்த சிகாமணி திரு.க. வச்சிரவேல் முதலியார், திருமுருக கிருபானந்த வாரியார், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு வீர சுப்பிரமணியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் தண்டபாணி தேசிகர், வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன், செஞ்சொற் கொண்டல் சிங்காரவேலன், முனைவர் இரா.செல்வக்கணபதி முதலான அறிஞர்கள் ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானின் திருக்காட்சியைக் கண்டு, மெய் சிலிர்த்து, உளம் குளிர்ந்து, கண்களில் அருவி நீர் சொரிய, ஆனந்தித்து, உச்சியிற் கூப்பிய கையினராய், போற்றித் துதித்தனர்.

தில்லைச் சிதம்பரத்துக்குச் சென்று நடராசப் பெருமானின் அற்புத நடனத்தைக் காணமுடியாதவர்கள் ஈழத்துச்சிதம்பரத்துக்குச் சென்று நடராசப்பெருமானின் திருநடனத்தைக் கண்டு வணங்கிப் பேரின்பப் பேற்றையடைகின்றனர்.

கொரொனோ என்னும் உலகளாவிய பெருந்தொற்று நோய் ஏற்பட்டுள்ள இன்றைய சூழலில் ஈழத்துச் சிதம்பரத்திலே அருள்பாலித்துவரும் சிவாகமி அம்பாள் சமேத நடராசப் பெருமானை – தில்லைக் கூத்தனை உள் ளத்திருத்தி வழிபடுவோம்.

**‘குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.’**

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார். ஆனந்தக் கூத்தனுடைய திருமேனி அமைப்பிலே அவர் முகத் தோற்றமே தனிச் சிறப்புடையது. அதிலும் புன் முறுவல் மிகவும் அழகு வாய்ந்தது. ஆன்மாக்களின் மூவகை வினைகளையும் நீக்கியருளும் குறிப்பினையுடையது.

ஆடல் வல்லான் நடராசப் பெருமானின் திருநடனத்தைக் கண்டு வழிபடுதல் பிறவிப் பிணிக்கு மருந்தாகும். ‘ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்’ தில்லைக் கூத்தனது ஆருத்துரா தரிசனத்தை ஈழத்துச் சிதம்பரத்திலே காணும் நாள் வாராதோ?

# தமிழர்கள் - முஸ்லிம்கள் பிரச்சினை இரு பக்க அரசியல்வாதிகளால்தான்!

## அடித்துக் கூறுகிறார் உலமாக் கட்சித் தலைவர்




(பாறுக் ஷிஹான்)

தமிழ் மக்களை ஒரு பக்கம் மூட்டி விட்டு அங்கு ஹக்கீமுடன் சேர்ந்து புரியாணி சாப்பிட்டு கொண்டிருக்கின்றார்கள். சுமந்திரன் எம்.பி போன்றவர்கள் கல்முனை பிரச்சினையை எப்போதோ தீர்த்திருக்க முடியும் என உலமாக் கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தனது கருத்தில் –

கல்முனை பிரச்சினையாக இருக்கட்டும், முஸ்லிம் – தமிழர் பிரச்சினையாக இருக்கட்டும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள் இரண்டு வகையான நிலைப்பாட்டினை எடுக்கின்றனர். ஒன்று மேடைகளில் பேசுகின்ற போது தமிழ் – முஸ்லிம் ஒற்றுமை வேண்டும் என்பார்கள். கீழ் இறங்கி வருகின்ற போது தமிழ் முஸ்லீம் சமூகத்தினை எவ்வாறு பிரிப்பது என்ற பாங்கில் செல்வதை நாம் காண்கின்றோம். சுமந்திரனினால் கல்முனை பிரச்சினையை எப்போதோ தீர்த்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் என்ன செய்கின்றார்கள்? தமிழ் மக்களை ஒரு பக்கம் மூட்டி விட்டு அங்கு ஹக்கீமுடன் சேர்ந்து புரியாணி சாப்பிட்டு கொண்டிருக்கின்றார்கள். இதனை நாம் பல தடவை கண்டுள்ளோம். நீங்கள் புரியாணி சாப்பிடும் போதாவது இதை பற்றி பேச முடியாதா? ஹக்கீமும் சம்பந்தனும் இணைந்து புரியாணி சாப்பிட முடியுமென்றால் ஏன் கல்முனையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து புரியாணி சாப்பிட முடியாது என்று நாங்கள் கேட்கின்றோம். மக்கள் மத்தியில் உசுப்பேத்த வேண்டும், குழப்பங்களை ஏற்படுத்த வேண்டும் என்றா செயற்படுகின்றீர்கள்? முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என அண்மையில் சுமந்திரன் கூறி இருந்தார்.

ஆனால் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே எவ்வித பிரச்சினையும் இல்லை.அரசியல் வாதிகள் தான் பிரச்சினையைர் தூண்டுகின்றனர் என்பதே எமது கருத்து என்றார்.

# கழிவு வாய்க்காலில் தேங்கிய பொருள்கள் யாழில் அகற்றல்!





யாழ்ப்பாணம் மாநகரில் கழிவுநீர் வாய்க்கால்கள் சுகாதாரத் தொழிலாளிகளால் கழிவுப்பொருள்கள் அகற்றப் பட்டுகின்றன.

யாழ்ப்பாணம் மாநகரின் போதனா வைத்தியசாலை வீதியில் இந்த நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் முன்னெடுக்கப்பட்டது.

கழிவுநீர் வாய்க்காலுக்குள் பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கிக் கிடப்பதால் நீர் வழிந்தோடும் செயற்பாடு பாதிக் கப்பட்டது. அதனால் வெள்ள நீர் வழிந்தோடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையிலேயே யாழ்ப்பா ணம் மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளிகளால் கழிவுநீர் வாய்க் கால்கள் துப்புரவு செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது.

## கொரோனாவிலிருந்து 715 பேர் மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 715 பேர் பூரண குணமடைந்து ஞாயிற்றுக்கிழமை வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்துமீண்டவர்களின்எண்ணிக்கை 28 ஆயிரத்து 267 ஆக அதிகரித்துள் ளது.

இலங்கையில் இதுவரையில் 36 ஆயிரத்து 677 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

அவர்களில் 28 ஆயிரத்து 267 பேர் குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 8 ஆயிரத்து 229 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

இதேநேரம், இந்தத் தொற்று காணரமாக இலங்கையில் இது வரையில் 171 பேர் உயிரிழந்துள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடுவலை பகுதியில் விசேட சோதனை ஹெரோயினுடன் மூன்று நபர்கள் கைது

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம் கடுவலை பகுதி யில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் 300 கிராம் ஹெரோயின் மற்றும் 59 மில்லியன் ரூபா ரொக்கப் பணத் துடன் இரு ஆண்களும் பெண் ணொருவருமாக மூன்று நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஹேவாகம, தலங்கம மற்றும் நுகேகொட பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். கைதுசெய்யப்பட்ட முதல் சந்தேக நபர் போதைப்பொருள் கடத்தல் காரன் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

சந்தேக நபர்களை மேலும் விசாரிக்க நீதிமன்றத்தால் ஏழு நாள் தடுப்புக்காவல் கோரப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

CNR world wide Express
International Courier & Cargo Service.
Courier & Cargo
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.
அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.

இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை


| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1978.04.24 | பிறந்த திகதி - 1991.03.13 |
| மதம் - இந்து K | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - விசாகம் 2 | நட்சத்திரம் - அவிட்டம் 1 |
| செவ் - ------ | பாவம் - 28 |
| பாவம் - 20 1/4 | செவ் - 08இல் |
| கல்வி - A/L | கல்வி - கனடா பட்டதாரி |
| தொழில் - ------- | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - படித்த பெண் | எதிர்பார்ப்பு - கனடாவில் மணமகன் தேவை. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக் களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங் களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

SOORYA
சிறந்த 10 ஆக்கங்களுக்கு SOORYA நத்தார் பரிசுப் பொதிகள்!!
இந்த பண்டிகைக் காலத்தில் சூர்யாவிடமிருந்து 4,000 ரூபா பெறுமதியான பரிசுப்பொதிகளை வெல்லுங்கள்!!
நீங்கள் செய்ய வேண்டியது:-
fb.com /Sun Match
1. எமது சூர்யா Sun Match Facebook page ஐ Like செய்து போட்டிக்கான Post ஐ உங்களது timeline இல் Share செய்யுங்கள்.
2. சூர்யா மெழுகுவர்த்திகளைக் கொண்டு நீங்கள் தயாரித்த அலங்காரத்தைப் புகைப்படமெடுத்து அதனை எமது page இல் comment செய்யுங்கள் (சூர்யா மெழுகுவர்த்திப் பெட்டி யொன்று அருகில் தெரியும் விதமாக புகைப்படமெடுக்கவும்).
3. அதில் 5 நண்பர்களை Tag செய்யுங்கள்.


போட்டி முடிவுத் திகதி 30.12.2020
தெரிவு செய்யப்படும் 10 வெற்றியாளர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கே பரிசுப்பொதிகள் அனுப்பி வைக்கப்படும்.
சூர்யா மெழுகுவர்த்திகள் 2 அளவுகளில் கிடைக்கின்றன.
மேலதிக விபரங்களுக்கு 0773598440 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2020 இல் வெளியிடப்பெற்றது.